*International Multidisciplinary Innovative Research Journal*
*An International refereed e-journal*

**ISSN: 2456 - 4613**
**Volume - III (2)**
**April 2019**

# இனியவை நாற்பதில் இல்லற வாழ்வியல் நெறி

**நாகஜோதி.செ**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்
தமிழ்நாடு, இந்தியா.

Corresponding author: nagajyothi@vvvcollege.org

## முன்னுரை

நம் நாடு மூவேந்தர்கள் ஆட்சிக்குப் பின் களப்பிரர்கள் ஆட்சிக்குட்பட்டது. இதனால் பிறமொழி, பிறமதம் புகுந்தது; மக்களின் மன அமைதி குழைந்தது. சங்க காலத்தில் பாடப்பட்ட பாடல்களின் பொருளமைவில் பெரும்பாலான புலவர்கள் பாட முன்வரவில்லை. எனினும் மானிடர்கள் கடைபிடிக்கவேண்டிய நீதிக்கருத்தமைந்த பாடல்களைப் புலவர்கள் பாடினர். இந்நோக்குடன் எழுந்த நூல்கள் அறஇலக்கியங்கள் எனப் பெயர் பெற்றன. அவ்விலக்கியங்களில் ஒன்று பூதஞ்சேந்தனார் பாடிய இனியவை நாற்பது ஆகும். இந்நூல் மனித வாழ்க்கைக்குத் தேவையான இனிய கருத்துக்களை எடுத்துரைக்கும் நாற்பது பாடல்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. பொதுவாக, அறம்- இல்லறம், துறவறம் என இரண்டு தன்மையன. இல்லறத்தை மேற்கொள்வோர் குடும்பம் என்னும் அகவாழ்க்கைக்கு உட்பட்டு பின்பற்ற வேண்டிய கடமைகளையும், செய்யக்கூடிய நல்லறத்தினையும், தன்மானம் காக்கவேண்டிய கொள்கைகளையும் இனியவை நாற்பது எடுத்துரைத்துள்ளமையை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## அன்பும் அருளும்

‘அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது’ என்பார் ஔவையார். இவ்வரிய பிறப்பில் அன்பும் அருளும் மானிடருக்குச் சிறந்த பண்பாகக் கருதப்படுகிறது. இல்லற வாழ்க்கையில் கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் அன்புணர்வோடு வாழவேண்டும். ‘அன்பு வயப்பட்டதே இல்வாழ்க்கை’ என்கிறது திருக்குறள்.

அன்புணர்வோடு வாழத்தெரியாதவன் அகவாழ்க்கை மட்டுமன்றி புறவாழ்க்கையும் வாழத் தகுதியற்றவன் என்கிறது இனியவை நாற்பது.

“ ………………….ஒப்ப முடிந்தால்
மனைவாழ்க்கை முன்இனிது மாணாதா மாயின்
நிலையாமை நோக்கி நெடியார் துறத்தல்
தலையாகத் தான்இனிது நன்கு.”1

மனிதன் ‘அன்பின் வழியது உயிர்நிலை’ என்ற கொள்கையோடு வாழவேண்டும். இவ்வன்பு சுயநலமற்ற அன்பாக, போலித்தனமற்ற அன்பாக, எல்லோரிடத்தும் இரக்கவுணர்வு கொண்ட அன்பாக இருத்தல் வேண்டும் என்பதை இனியவை நாற்பது,

“பங்கமில் செய்கைய ராகிப் பரிந்துயார்க்கும்
அன்புடைய ராதல் இனிது.”2 என்றும்
“எத்திறத் தானும் இயைவ கரவாத
பற்றினின் பாங்கினியது இல்”3

என்றும் பகர்கிறது. தமிழர்களின் வாழ்வில் விருந்தோம்பல் பண்பு மிகச் சிறந்தது. செல்வச் செழிப்புடன் வாழ்வோர் விருந்தினை ஓம்பி செயல்படுத்தினால் அவ்விருந்தால் அவரும் அவ்விருந்தினை ஏற்போரும் மனம் மகிழ்வர். இதனைக் கருத்தில் கொண்ட இனியவை நாற்பது,

“எத்துணையும் ஆற்ற இனிதென்ப பால்படும்
கற்றா உடையான் விருந்து”4 என்கிறது.

மேற்கண்ட பாடல் வரிகள் இல்லறம் நல்லறமாக அமைய அன்பும் அருளும் அவசியமானது என்கிறது.

**குழந்தைச் செல்வம் போற்றல்**

இல்லற வாழ்க்கையில் கணவன் மனைவியின் அன்பு வெளிப்பாட்டுச் சின்னமாகிய குழந்தைச் செல்வம் பதினாறு செல்வங்களில் மிகச் சிறந்ததாகும். குழந்தையின் அழகில் மயங்காதோர் எவருமிலர். அவர்தம் மழலைமொழியை விரும்பாதோர் எவருமிலர். பாண்டியன் அறிவுடை நம்பி குழந்தையின் இனிமையை,

“இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்ப்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களே இல்லோர்க்கு
பயக்குறை இல்லை தாம் வாழும் நாளே”5

என்கிறார். இனிமையைத் தரும் குழந்தைச் செல்வத்தின் அழகினை,

'குழவி தளர்நடை காண்டல் இனிதே

அவர் மழலை கேட்டல் அமிழ்தின் இனிதே"6

என்கிறது இனியவை நாற்பது. குழந்தைச்செல்வத்தை அறியாதோர் குழலினிது, யாழினிது என்பர். ஆனால் இதைவிட இனிமையானது குழந்தைச்செல்வம் என்பதை வள்ளுவர் பறை சாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். செல்வங்களில் சிறந்த செல்வமாகிய குழந்தை பிணியின்றி நலத்தோடு இருந்தால் இல்லற வாழ்க்கை சிறக்கும் என்பதை,

"குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே" என்கிறது இனியவை நாற்பது.

**பிறர்மனை வெறுத்தல்**

இல்லறத்தை நல்லறமாக்கும் பொறுப்பும் கடமையும் கொள்கையும் ஒவ்வொரு குடும்பத் தலைவனுக்கும் அவசியம். அவனது கொள்கையில் ஒன்று தன் மனைவியைத் தவிர பிற பெண்டிரை நோக்காத பேராண்மையாகும். இத்தகைய பேராண்மையோடு வாழ்ந்தால் அவனது இல்லறம் நல்லறமாகும் என்பது நிச்சயம். இதனை இனியவை நாற்பது,

"பிறன்மனை பின்னோக்காப் பீடினிது" என்கிறது. மேலும் ஆடவர் ஒவ்வொருவரும் தன் மனைவியைத் தவிர பிற பெண்டிரை நஞ்சு எனக் கருதுதல் வேண்டும் என்பதை,

"தடமென் பணைத்தோள் தளிரிய லாரை

விடமென்று உணர்தல் இனிது"

எனப் பறை சாற்றுகிறது இனியவை நாற்பது.

**ஈகையுணர்வு கொள்ளல்**

ஒவ்வொரு மனிதனையும் உயர்வாக்குவது ஈகைக்குணம் ஆகும். மனிதனாகப் பிறந்ததன் பயனைப் பெறச்செய்வது ஈகையுணர்வு என்பர். "ஆற்றுதல் என்பது ஒன்று அலர்ந்தவர்க்கு உதவுதல்"10 என்பதை நோக்கமாகக் கொண்ட ஆடவர்கள், "வினையே ஆடவர்க்கு உயிரே"11 என வாழ்ந்தனர். தலைவியைப் பிரிந்து பொருள் ஈட்டச் செல்வது மனதிற்கு துன்பத்தைத் தந்தாலும் பொருளீட்டுவதன் நோக்கம் ஈகை செய்வதற்கே என்பதைக் குறிக்கோளாகக் கருதி வாழ்ந்தனர். இத்தகைய ஈகைக் குணத்தின் சிறப்பையும் அவசியத்தையும் இனியவை நாற்பது,

"…………முன் இனிதே

எள்துணை யானும் இரவாது தான் ஈதல்

எத்துணையும் ஆற்ற இனிது"12 என்கிறது.

### பாவம் செய்யாதிருத்தல்

'அன்பே கடவுள்' என்ற உணர்வோடு மனிதன் வாழ்தல் சிறப்பாகும். இவ்வுணர்வுக்கு மாறாகப் பிறரிடம் சினம் கொண்டு இரக்கமற்ற தன்மையில் பேசுவதோ, பொறாமையுணர்வு கொண்டு செயல்படுவதோ பாவச்செயல் என்பர் சான்றோர். இக்கருத்தினை வலியுறுத்தும் விதமாக இனியவை நாற்பது,

"ஆற்றானை யாற்றென்று அலையாமை முன்இனிதே
கூற்றம் வரவுண்மை சிந்தித்து வாழ்வினிதே
ஆக்கம் அழியினும் அல்லவை கூறாத
தேர்ச்சியின் தேர்வினியது இல்"13

என்கிறது. வாழ்க்கை நிலையானது அன்று; எனவே தம் வாழ்நாளில் எவர் மனமும் துன்புறாத வகையில் நடந்து கொள்ளல் அவசியம் என்பதை,

"அவ்வித் தழுக்கா றுரையாமை முன்இனிதே
செவ்வியனாய்ச் செற்றுச் சினம்கடிந்து வாழ்வினிதே"14

என்கிறது இனியவை நாற்பது.

### மானம் காத்தல்

மனிதன் ஒவ்வொருவனும் தனக்கு ஆறறிவு என்பதை நிரூபிக்கும் விதத்தில் வாழவேண்டும். மனிதன் தன்னால் எவ்வளவு பொருள் சேர்க்கமுடியுமோ அதைக் கருதி மனமகிழ்வோடு வாழக் கற்றுக்கொள்வது அவசியம். அங்ஙனமன்றி எக்காரணத்திற்காகவும் எவரிடமும் பொருளைக் கடன் பெறுவதோ, பிறரிடம் இரந்து கேட்பதோ அவனுக்கு இழிவைத் தரும் என்பதை வலியுறுத்தும் நோக்கம் கொண்ட இனியவை நாற்பது,

"கடமுண்டு வாழாமை காண்டல் இனிதே" 15 என்றும்

"மான மழிந்தபின் வாழாமை முன்இனிதே"16 என்றும் பகர்கிறது. இதன்மூலம் மனிதன் தனக்கு இழிவை ஏற்படுத்தும் விதமாக நடந்துகொள்ளல் கூடாது என்பதற்கான அறிவுரைகளை இனியவை நாற்பது வலியுறுத்துகிறது என உணர முடிகிறது.

### முடிவுரை

'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது'17

என்கிறது. திருக்குறள். இல்லறம் நல்லறமாக கணவன்-மனைவி இருவரும் அன்போடும் அருளோடும் வாழ வேண்டும் என்றும் இல்லறம் இனிமையாவதற்குக் குழந்தைச்

செல்வமும் விருந்தோம்புதலும் அவசியம் என்றும் இல்லறத்தலைவன் நற்பண்புக்கு இழுக்கு நேரும் விதத்தில் பிற பெண்டிரை நாடாதிருத்தல் வேண்டும் என்றும் ஒவ்வொரு ஆடவனும் ஈகைப் பண்பை நிலைநாட்டுதலைக் கருதி பொருளீட்டுதல் வேண்டும் என்றும், எச்சூழலுக்காகவும் கடன் வாங்கக் கருதாதிருத்தல் வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளமையை இனியவை நாற்பது வழி அறியமுடிந்தது.

**அடிக்குறிப்புக்கள்:**

1. இனியவை நாற்பது,பா-2
2. மேலது பா 9:3-4
3. மேலது பா26:3-4
4. மேலது பா,38:3-4
5. புறநானூறு,பா,210
6. இனியவை நாற்பது, பா-14:1-2
7. மேலது, பா-12:1
8. மேலது, பா-15:1
9. மேலது, பா-37:3-4
10. கலித்தொகை, 133:6
11. குறுந்தொகை, 35:1
12. இனியவை நாற்பது, பா-16:3-4
13. மேலது, பா-28
14. மேலது, பா-36:1-2
15. மேலது,பா-10:1
16. மேலது, பா-13:1
17. திருக்குறள்,45